பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 07 2026 WEDNESDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அரியவகை கனிம சுரங்கங்களின் 8ஆவது கட்ட ஏலத்தை மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி, புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.
- நாட்டின் அணுசக்தி திறன், 24 அணுஉலைகள் மூலம் 8 புள்ளி ஏழு எட்டு ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்தியா - மாலத்தீவு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான முதல் சுற்று பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நிறைவடைந்தது.
- Hormuz நீரிணை வழியாக கப்பல்களுக்கு 20 சதவீத கட்டணம் வசூலிக்கும் முறையை, அமெரிக்க அதிபர் டோனல்ட் ட்ரம்ப் திரும்பப் பெற்றுள்ளார்.
- உலக கோப்பை கால்பந்துப் போட்டியில் ஸ்பெயின் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<<

அரியவகை கனிம சுரங்கங்களின் 8ஆவது கட்ட ஏலத்தை மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

புதிதாக கண்டறியப்பட்ட 13 சுரங்கங்கள் உட்பட 9 மாநிலங்களில் அடங்கிய 20 அரியவகை கனிம சுரங்கங்கள் இந்த ஏலத்தில் இடம்பெறும் என்று மத்திய சுரங்கத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Molybdenum, கிராஃபைட், Gluauconite, டைட்டானியம், டங்ஸ்டன், லித்தியம் போன்ற அரியவகை கனிமங்கள் அடங்கிய சுரங்கங்கள் ஏலம் விடப்படவுள்ளன.

பசுமை எரிசக்தி, உரங்கள் தயாரிப்பு பாதுகாப்பு மற்றும் இதர முக்கியமான துறைகளில் இந்த கனிமங்களின் பயன்பாடு இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுவரை 56 அரியவகை கனிம சுரங்கங்கள் வெற்றிகரமாக ஏலம் விடப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<

நாட்டின் அணுசக்தி திறன் 24 அணுஉலைகள் மூலம், 8 புள்ளி ஏழு எட்டு ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாடுமுழுவதும் 7 இடங்களில் அமைந்துள்ள இந்த அணுஉலைகள் மூலம், உறுதி செய்யப்பட்ட எரிசக்தி திறன் இந்த அளவை எட்டியிருப்பதாக மத்திய எரிசக்தி துறை கூறியுள்ளது.

இவற்றில், அழுத்தத்துடன் கூடிய அணுஉலைகள் மூலமும், கொதிதிறன் அணுஉலைகள் மூலமும் மின்உற்பத்தி செய்யப்பட்டு வருவதாகவும், இதன்மூலம் அணுசக்தி திட்டங்கள் நிலையான வகையில் விரிவுபடுத்தப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இதன்மூலம் பசுமை பொருளாதார வளர்ச்சியும், வலுவான எரிசக்தி பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டிருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

இந்தியா - மாலத்தீவு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான முதல் சுற்று பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நிறைவடைந்தது.

கடந்த வாரத்தில் காணொலி வாயிலாக தொடங்கிய இந்த பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

பல்வேறு விஷயங்கள் தொடர்பாக இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலத்தீவின் மிக முக்கிய வர்த்தக நாடாக இந்தியா விளங்குகிறது என்றும், சென்ற நிதியாண்டில் 771 மில்லியன் டாலர் அளவுக்கு இருநாடுகளுக்கும் இடையே நடைபெற்றதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நாசா விண்வெளி வீரர் Anil Menon நேற்றிரவு ரஷ்ய விண்கலம் மூலம், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு புறப்பட்டுச் சென்றார்.

Soyuz Ms-29 விண்கலம் மூலம், இந்திய நேரப்படி நேற்றிரவு மணி 8.17-க்கு அவர் புறப்பட்டுச் சென்றதாக நாசா தெரிவித்துள்ளது.

அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப செயல்பாட்டை மையமாக கொண்டு, முதல் முறையாக Anil Menon விண்வெளி நிலையத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

Hormuz நீரிணைப் பகுதியில், இரண்டு வர்த்தக கப்பல்கள் தாக்கப்பட்டதால், மேற்காசியாவில் எழுந்துள்ள பதற்றம் குறித்து மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், உயர்நிலை குழு ஆலோசனையை மேற்கொண்டார்.

அந்த தாக்குதலில் இந்திய மாலுமி ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், அப்பகுதியில் மேற்கொள்ள வேண்டிய ஒருங்கிணைந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து புதுதில்லியில் நேற்று உயரதிகாரிகளுடன் அவர் விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

இந்திய மாலுமிகளின் பாதுகாப்பு மற்றும் நலன்களை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கப்பல் போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கு அமைச்சர அறிவுறுத்தினார்.

Hormuz நீரிணையை கடந்து செல்லும் கப்பல்கள் ஒவ்வொன்றையும், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், வெளியுறவு அமைச்சகத்துடன் இணைந்து கண்காணிக்க வேண்டும் என்றும் திரு. சர்பானந்த சோனோவால் அப்போது கேட்டுக் கொண்டார்.

>>>>>>>><<<<<<<

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை செயல்படுத்துவது குறித்து, பெல்ஜியம் துணை பிரதமர் David Clarinval-லுடன் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் ஆலோசனை நடத்தினார்.

ஸ்பெயின் பயணத்தை நேற்று நிறைவு செய்த அவர், பெல்ஜியம் தலைநகர் Brussels சென்றடைந்தார்.

அங்கு பெல்ஜியம் துணைப் பிரதமரும், வேலைவாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் வேளாண் துறை அமைச்சருமான David Clarinval-ஐ சந்தித்து, வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விரிவான ஆலோசனை நடத்தினார்.

>>>>>>>><<<<<<<

Hormuz நீரிணை வழியாக கப்பல்களுக்கு 20 சதவீத கட்டணம் வசூலிக்கும் முறையை, அமெரிக்க அதிபர் டோனல்ட் ட்ரம்ப் திரும்பப் பெற்றுள்ளார்.

கப்பல்களுக்கான கட்டணத்திற்கு பதிலாக, அமெரிக்காவில் வளைகுடா நாடுகள் முதலீட்டு ஒப்பந்தங்களை அமல்படுத்த முடிவு செய்துள்ளதாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*Hormuz நீரிணையை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதாக ஏற்கனவே அவர் தெரிவிருந்தார்.*

*இந்நிலையில், அதன் வழியாக கச்சா எண்ணெய் வர்த்தகம் தடையின்றி நடைபெறுவதாகவும், அனைத்து நாடுகளின் கப்பல்களுக்கும் நீரிணை திறக்கப்பட்டுள்ளதாகவும் அந்த பதிவில் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.*

*>>>>>>>><<<<<<<*

*சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்து கடத்தல் கும்பலைச் சேர்ந்த 3 பேரை பஞ்சாப் காவல்துறையினர் நேற்று கைது செய்துள்ளனர்.*

*கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் 18 வயதுக்கு குறைவானவர் என்று பஞ்சாப் காவல்துறை தெரிவித்துள்ளது.*

*அவர்களிடமிருந்து ஏ.கே. 47 ரக துப்பாக்கி உள்ளிட்ட அதிநவீன துப்பாக்கிகள் மற்றும் கையெறி குண்டுகளை காவல்துறையினர் பறிமுதல் செய்திருப்பதாக அம்மாநில காவல்துறை தலைமை இயக்குநர் திரு. Gaurav Yadav தெரிவித்துள்ளார்.*

*கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் அமிர்தசரஸ் அருகேயுள்ள Balagan பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.*

*>>>>>>>><<<<<<<*

*அஸ்ஸாமில் ஏற்பட்ட கனமழை மற்றும் வெள்ளத்தால், ஆறு மாவட்டங்களில் அடங்கிய 37 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*தற்போது அங்கு நீடித்து வரும் வெள்ள நிலவரம் காரணமாக, 12 வருவாய் வட்டங்களில் அடங்கிய 92 கிராமங்களில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதாக அம்மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.*

*Sonitpur மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில், இதுவரை வெள்ள பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4ஆக அதிகரித்துள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.*

வடக்கு லக்கிம்பூர் மாவட்டம், வெள்ளத்தால் மிக மோசமான பாதிப்பை அடைந்துள்ளதாகவும். Sonitpur, Dhemaji, Sivasagar, Jorhat, Dibrugarh மாவட்டங்கள் தொடர்ந்து வெள்ளத்தில் தத்தளித்து வருவதாகவும், ஒரு லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளதாகவும் அஸ்ஸாம் மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<

ஒடிசா மாநிலத்தில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பீகார் மாநிலத்தின் ஒரு சில இடங்களிலும், வடகிழக்கு மாநிலங்கள், சத்திஷ்கட், ஜார்க்கண்ட் மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அந்தமான், நிகோபார் தீவுகளில் இடி மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் மேற்குவங்கத்தின் கங்கை கரையோரப் பகுதிகள், ஆந்திர, கர்நாடக, கேரள மாநிலங்கள் மற்றும் ஜம்மு கஷ்மீர், லடாக் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, கடலோர ஆந்திரப் பகுதிகளிலும், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இன்றும் வெப்பஅலை தொடரும் என்று வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

>>>>>>>><<<<<<<

உலக கோப்பை கால்பந்துப் போட்டியில் ஸ்பெயின் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

டெக்ஸாலில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் அணி 2-0 என்ற கோல்கணக்கில் பிரான்ஸை வென்றது.

அர்ஜென்டினா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே இன்று நடைபெறும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணியுடன், இறுதிப்போட்டியில் ஸ்பெயின் விளையாடும்.

>>>>>>>><<<<<<<

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

*பர்மிங்காமில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி 47 புள்ளி ஐந்து ஓவரில் 258 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*259 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 45 புள்ளி இரண்டு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 262 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*கேப்டன் சுப்மன் கில் 80 ரன் எடுத்திருந்தபோது, காயம் காரணமாக வெளியேறினார்.*

*வாஷிங்டன் சுந்தர் 52 ரன்னும், அக்ஸர் பட்டேல் 57 ரன்னும் எடுத்து வெற்றிக்கு வழிவகுத்தனர்.*

*>>>>>>>>end<<<<<<<*